மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சொன்னால் வருத்தப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: புயல் அடிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். புயல்போன்று ஏதாவது அடித்து, அதனால் ஏதாவது சீர்குலைவு ஏற்பட்டதா? சீர்குலைவை சீரமைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: புயலினால் சீர்குலைவு ஏற்படவில்லை. காற்று என்பது, காற்று, பெருங் காற்று, புயல், கடும் புயல், என்று நான்கு வகையாகப் பிரிக்கப்படும் அன்று கொஞ்சம் வேகமாக காற்று அடித்தது. எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை.

கைக்குத்தல் அரிசி தயாரிப்புத் தொழிற்சாலை

*809 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நமது மாநிலத்தில் கைக்குத்தல் அரிசி தயாரிப்பதற்காக தொழிற்சாலை ஏதேனும் தற்போது உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கைக்குத்தல் அரிசி தயாரிக்கும் கூட்டுறவுக் கழகங்கள் 129 உள்ளன.

திருமதி த. ந. அனந்தநாயகி: கூட்டுறவுக் கழகங்களெல்லாம் லாபத்தில் நடைபெறுகின்றனவா? கைக்குத்தல் அரிசிக்கு மக்களிடையே அதிக தேவை இருக்கிறது என்று ஏதாவது இந்த அரசாங்கத்திற்கு தெரியவந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இதில் உள்ள 81 கூட்டுறவுக் கழகங்கள் நஷ்டத்தில் நடைபெறுகின்றன. 25 லாபத்தில் நடைபெறுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the fact that handpounded rice is supposed to be healthier, is there any proposal with the Government to encourage hand-pounding by co-operative societies and arranging marketing organisations so that people will know where to buy and how to get it?

The Hon. THIRU SI. PA. ADITANAR: Sir, most of the handpounded rice is now not sold to the public; it is sold to the jails, hospitals and hostels; at the moment, the requirements of jails, hospitals and hostels are being met by the hand-pounding of paddy societies.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கைக்குத்தல் அரிசி மிகவும் சத்துள்ள அரிசி. ஆகவே அது ஆஸ்பத்திரிகளுக்கும், ஜெயில்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்று கூறினார்கள். பொது மக்களும் அதை விரும்பி சாப்பிடுகிறார்கள். ஆகவே, கைக்குத்தல் அரிசி நல்ல சத்துள்ள உணவு என்று கூட்டுறவுத் துறை நல்ல பிரசாரம் செய்ய முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பொதுமக்களுக்கு எது நல்லது, எது நல்லது அல்ல என்று தெரியும் என்று கருதுகிறேன். அதற்காக தனியாக பிரசாரம் எதுவும் தேவையில்லை. பொது மக்கள் கைக்குத்தல் அரிசி சாப்பிடுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : கைக்குத்தல் அரிசியை ஆஸ்பத்திரிகளுக்கும், ஜெயில்களுக்கும் அனுப்புவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி அனுப்பியும்கூட, அவர்களுக்கு விற்பனை செய்தும்கூட, இதில் நஷ்டம் வருவதற்குக் காரணம் என்ன ? ஒரு வேளை இந்த அரிசிக்கும், மற்ற இயந்திரத்தின் மூலம் தயாரிக்கப்படுகிற அரிசிக்கும் விலைகளில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா ? விலைகளில் ஏதாவது வித்தியாசம் இருந்தால், விலையை சீர்படுத்திக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது சப்ஸிடி தருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கூட்டுறவுத் துறையின் மூலம் தயாரிக்கப்படுகின்ற அரிசி மொத்தத்தில் ஐந்து சதவிகிதம் அதிக விலையில் தான் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள்கூட குறிப்பிடுகிற பொழுது அநேக நோய்கள் வைடமின் சத்துக்கள் இல்லாமையினால் ஏற்படுகின்றன என்று கூறினார்கள். அப்படி இருக்கும்பொழுது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், கைக்குத்தல் அரிசியில் சத்து வன்மைகளெல்லாம் இருப்பதனால் மக்களிடையே பிரசாரப்படுத்த வேண்டும் என்று அவசியத்தை அறிந்திருக்கிறார்களா ? மக்களே புரிந்து கொள்வார்கள் என்று சொன்னார்கள். நல்ல பல திட்டங்கள் இருந்தாலும் மக்கள் அவைகளுடைய பலனை அறியாமல் இருக்கிறார்கள். ஆகவே, பிரசாரம் மிகவும் அவசியம் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கைக்குத்தல் அரிசியினால் ஏற்படுகிற நன்மை மக்களுக்கு ஏற்கெனவே தெரியும். தனியாக பிரசாரம் தேவையில்லை இந்தத் துறையிலே. இன்பர்மேஷன் அண்டு பப்ளிஸிடி டிபார்ட்மெண்டில் ஏதாவது, பிரசாரம் செய்வதாக இருந்தால் அதுபற்றி அந்தத் துறையில் நன்றாக ஆய்வார்கள் என்று கருதுகிறேன்.